**குறிப்பு : மாணவர் வினாத்தாளை படிப்பதற்கு 15 நிமிடம் ஒதுக்கப்பட வேண்டும்.**

**பகுதி - அ**

I. **புரிந்து கொள்ளுதல் - விடையளித்தல்** **(12 மதிப்பெண்)**

அ. **கீழ்க்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக.** 4x1=4

(அ) 1914 மே மாதம் 5-ஆம் நாள் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்

(ஆ) வீ.அயோத்திதாசப் பண்டிதர் என்பாரிடம் காத்தவராயன் கல்வி கற்றார்

(இ 1845-ஆம் ஆண்டு மே மாதம் இருபதாம் நாள் அயோத்திதாச பண்டிதர் பிறந்தார். இவருக்கு, இவர் பெற்றோர் இட்ட பெயர் காத்தவராயன் ஆகும்.

(ஈ) நீலகிரி மலைப்பகுதியில் வாழும் தோடர் இனப்பெண்ணை கலப்புத் திருமணம் செய்து கொண்டார்.

அ. **கொடுக்கப்பட்ட செய்யுளைப் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.** 4x½ =2

வினைச் சொல்போய் வேற்றுமையை ஏற்பதில்லை!
வெண்பாப் போய்ப் பிறதளையை மணப்ப தில்லை !
நினைவுயர்ந்த தமிழ் நெஞ்சந் தமது மானம்
நீக்கவருஞ் சிறுசெயலை நினைப்ப தில்லை!

2. வினைச்சொல் எதை ஏற்பது இல்லை?
3. வெண்பா எதனை மணப்பது இல்லை?
4. தமிழ் நெஞ்சம் எதை நினைப்பதில்லை?
5. வேற்றுமை என்பதன் எதிர்ச்சொல் கூறு?

இ. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

4x1/2=2

கல்கி அவர்களைத் தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட்டு என்பர். சுவையான கதையை வருணித்துச் செல்வதில் இவருக்கு நிகர் இவரே. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியில் எழுதப்பெற்ற சுவையான புதினம் அலையோசை ஆகும். இது சாகிந்திய அகாதமியின் பரிசினை பெற்ற நூலாகும். இவர் இறுதியாக எழுதிய புதினம் அமரதாரா என்பது, இவரால் தொடங்கப்பட்ட இப்புதினம் இவர் மகள் ஆனந்தியால் முடிக்கப்பட்டது.

5. தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட்டு யார்?
6. கல்கியின் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நூலின் பெயர் என்ன?
7. கல்கியின் இறுதி புதினம் எது?
8. கல்கியின் இறுதி புதினம் யாரால் எழுதி முடிக்கப்பட்டது?

**ஈ. கீழ்க்காணும் நிகழ்வை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மகாத்மா காந்தி நினைவாக, காந்தி என்னும் பெயரில் திரைப்படம் எடுக்கப்பட்டபோது நடந்த நிகழ்ச்சி. காந்தியாக நடிக்க பென் கிங்ஸ்லி என்னும் நடிகர் தேர்வு செய்யப்பட்டார். அவர் தங்குவதற்கு புதுதில்லியில் ஆடம்பரமான நட்சத்திர விடுதி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பென் கிங்ஸ்லி அவ்விடுதிக்கு வந்தார். அவருக்கு தேவையான அனைத்து வசதிகளும் மிக சிறப்பாக அமைக்கப்பட்டதை கண்டார். பென்சிங்ஸ்லி இவ்வறையில் இருக்கும் அனைத்து பொருட்களையும் அகற்றிவிட்டு ஒரு பாயும், தலையணை ஒன்றும் போதும் என்றார். அதனை கேட்டு அங்கிருந்தவர்கள் அனைவரும் வியப்படைந்தனர்.

9. யாருடைய நினைவை போற்றும் வகையில் திரைப்படம் எடுக்கப்பட்டது?
10. திரைப்படத்தில் நடித்த கதாநாயகரன் பெயர் என்ன?
11. நடிகர் எவை மட்டும் போதும் என்றார்?
12. திரைப்பட நடிகர் தங்குவதற்கு எப்படிப்பட்ட விடுதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது?

II. **சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல்** 18 மதிப்பெண்

**உ. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு வாக்கியங்களில் விடை எழுதுக.**

2x2=4

13. தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து எழுதுக.
14. தொல்லியல் துறை பற்றி எழுதுக.

**அ. கீழ்க்காணும் வினாக்களுக்கு பன்னிரண்டு வாக்கியங்களில் விடையெழுதுக.**

1x4=4

15. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**ஆ. கீழ்க்காணும் வினாவிற்கு விடை எழுதுக.** 2x5=10

16. உன் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள வருமாறு உன் நண்பன்/தோழிக்கு அழைப்பு கடிதம் எழுதுக.

**(அல்லது))**

தேசிய ஒமைப்பாடு குறித்து கட்டுரை எழுதுக.

17. மழை நீர் சேகரிப்பு எனும் தலைப்பில் கையெழுத்து இதழ் தயார் செய்க.

**(அல்லது))**

பள்ளியில் நடைப்பெற்ற ஓவியக் கண்காட்சிக் குறித்து விளக்கி எழுதுக.

**தொகுப்பு மதிப்பீட்டுத் தேர்வு - 2**

**முதல் மொழி தமிழ்**

**தமிழ் இரண்டாம் தாள்**

**பத்தாம் வகுப்பு**

**பகுதி - ஆ**

**மதிப்பெண் : 10** **நேரம் : 30 நிமிடம்**

| கல்வித்தரம் | புரிந்துகொள்ளுதல் விடையளித்தல் | சுயமாக எழுதுதல் படைப்பாற்றல் | மொழித்திறன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | 1-13 | 14-18 | 1-20 | |
| ஒதுக்கப்பட்ட மதிப்பெண் | 12 | 18 | 10 | 40 |
| மாணவர் பெற்ற மதிப்பெண் | | | | |
| தரம் | | | | |

**குறிப்பு :** 1. கொடுக்கப்பட்ட வினாக்கான விடையை அடைப்பில் குறிக்கவும்

2. பகுதி - ஆ-விற்கான விடையை பகுதி - ஆ வினாத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.

3. பகுதி - ஆ வினாத்தாளை பகுதி - அ எழுதிய விடைத்தாளுடன் இணைத்து தருதல் வேண்டும்.

**பகுதி - ஆ**

III. **கீழ்க்காணும் வினாக்களுக்கான உரிய விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எதிரே உள்ள அடைப்புக்குறியில் விடைக்கான எழுத்தை எழுதுக.** 20x1/2=10

1. திருக்குறளை எழுதியது யார்? என ஆசிரியர் மாணவனிடம் கேட்டது- எவ்வகை வினா? ( )
(அ) அறியா வினா (ஆ) அறிவானா (இ)கொளல்வினா (ஈ) கொடை வினா

2. பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா எவ்வகைவினா ( )
(அ) கொளல் வினா (ஆ) கொடை வினா (இ)அறிவனா (ஈ)அறியா வினா

3. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? என்பது எவ்வகை வினா ( )
(அ) ஐய வினா (ஆ) ஏவல்வினா (இ) அறிவினா (ஈ)அறியா வினா

4. இது செய்வாயா? என்பதற்கு செய்வேன் என்பது எவ்வகை வினா ( )
(அ) மறைவிடை (ஆ) நேர் விடை (இ) சுட்டு விடை (ஈ) ஏவல் விடை

5. செய்வாயா? என்பதற்கு கை வலிக்கும் என்பது எவ்வகை விடை ( )
(அ) உறுவது கூறல் விடை (ஆ) உற்றதுரைத்தல் விடை(இ) ஏவல் விடை (ஈ) மறைவிடை

6. செய்வாயா? என்பதற்கு செய்யேன் என்பது எவ்வகை விடை ( )
(அ) சுட்டுவிடை (ஆ) ஏவல் விடை (இ) நேர் விடை (ஈ)மறைவிடை

7. முருகன் இரவும் பகலும் படித்ததால், அதிக மதிப்பெண் பெற்றான். எவ்வகைத் தொடர்? ( )
(அ) கட்டளைத்தொடர் (ஆ) கலவைத் தொடர்
(இ) வினாத் தொடர் (ஈ) தொடர்நிலைத் தொடர்

8. கவனமாக படி என்பது - எவ்வகைத் தொடர் ( )
(அ) வினாத்தொடர் (ஆ) உணர்ச்சித்தொடர்
(இ) கலவைத் தொடர் (ஈ) கட்டளைத் தொடர்

9. கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால் வாழ்வில் உயர்ந்தார். என்பது எவ்வகைத் தொடர்? ( )
(அ) தொடர்நிலைத் தொடர் (ஆ) கலவைத்தொடர்
(இ) தனிநிலைத்தொடர் (ஈ) வினாத்தொடர்

10. பாத்திமா திருக்குறள் கற்றாள்-என்பது எவ்வகைத் தொடர் ( )
(அ) செய்வினைத் தொடர் (ஆ) செய்யப்பாட்டு வினைத்தொடர்
(இ) தன்வினைத்தொடர் (ஈ) பிறவினைத்தொடர்

11. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் - என்பது எவ்வகைத் தொடர் ( )
(அ) எதிர்மறைத் தொடர் (ஆ) தன்வினைத் தொடர்
(இ) பிறவினைத்தொடர் (ஈ) செய்வினைத் தொடர்

12. வாரியார் குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும் என்றார். - எவ்வகைத் தொடர். ( )
(அ) அயற்கூற்று (ஆ) எதிர்மறை
(இ) உணர்ச்சித்தொடர் (ஈ) நேர்க்கூற்றுத்தொடர்

13. கானல் நீர் - மரபுத் தொடருக்கு பொருள் கூறு ( )
(அ) இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இராது
(ஆ) மிகுதியாய் பேசுதல்
(இ) பொய்யழுகை
(ஈ) எண்ணித் துணியாதார்

14. எடுப்பார் கைப்பிள்ளை - மரபுத் தொடருக்கான பொருள் கூறு. ( )
(அ) எண்ணித் துணியாதார்
(ஆ) தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சை கேட்டு நடப்பவர்
(இ) பட்டறிவு இல்லாத படிப்பறிவு
(ஈ) இல்லாத ஒன்று.

15. ஆகாயத் தாமரை - மரபுத் தொடருக்கான பொருள் கூறு ( )
(அ) இல்லாத ஒன்று (ஆ) பொய்யழுகை
(இ) மிகுதியாய் பேசுதல் (ஈ) பயனின்றி இருத்தல்

16. முதலைக் கண்ணீர் - மரபுத் தொடருக்கான பொருள் கூறு ( )

(அ) அலைந்து திரிதல் (ஆ) பொய்யழுகை

(இ) மிகுதியாய் பேசுதல் (ஈ) பயனின்றி இருத்தல்

வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

17. கீரியும் பாம்பும் போல

.....................................................................................................................

.....................................................................................................................

18. இலவுகாத்த கிளி போல

.....................................................................................................................

.....................................................................................................................

19. கல்மேல் எழுத்து போல

.....................................................................................................................

.....................................................................................................................

20. மலரும் மணமும் போல

.....................................................................................................................

.....................................................................................................................

**தொகுப்பு மதிப்பீட்டுத் தேர்வு - 3**
**மாதிரி வினாத்தாள் தமிழ்**
**தமிழ் முதல் தாள்**
**பத்தாம் வகுப்பு**
**பகுதி - அ & ஆ**

**மதிப்பெண் : 40** **நேரம் : 2.45 நிமிடம்**

---

**குறிப்பு : மாணவர் வினாத்தாளை படிப்பதற்கு 15 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**பகுதி - அ**

I. **புரிந்து கொள்ளுதல் - விடையளித்தல்** **(12 மதிப்பெண்)**

**அ. கீழ்க்காணும் செய்யுட்களில் ஒன்றிற்கு பதவுரை எழுதுக.**

1. அ. பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் 1x4=4
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(அல்லது)

ஆ. இடிப்பரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

**ஆ. கீழ்க்காணும் செய்யுட்களில் ஒன்றை நிரப்பி, கருத்துரை எழுதுக.** 1x4=4

2. அ. உலகியலின் அடங்கலுக்கும்

______________________________

______________________________

______________________________

சாய்க்காமை வேண்டும்.

(அல்லது)

ஆ. இன்றிளைப் பாறுவம்

______________________________

______________________________

______________________________

நெஞ்சிடத்தே!

**அ. கீழ்க்காணும் உரைநடைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

4x1=4

பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள். தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது. உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

3. பழந்தமிழகத்தில் உயர்ந்தோராக மதிக்கப்பட்டவர் யார்?
4. உண்டி என்பதன் பொருள் யாது?
5. வயலும் வயல் சார்ந்த இடத்தை எவ்வாறு அழைப்பர்?
6. தமிழரால் போற்றப்படும் புகழ்மொழி யாது?

II. **சுயமாக எழுதுதல் ( 18 மதிப்பெண்)**

ஆ. **கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக.**

4x2=8

7. பெரியபுராணம் - நூற்குறிப்பு எழுதுக.
8. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை?
9. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?
10. கல்விப் படம் குறித்து எழுதுக ?

இ. **கீழ்க்காணும் வினாக்களுக்கு பன்னிரண்டு வாக்கியங்களில் விடையளி.**

11. குகனுக்கும், இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

12. மேடைப் பேச்சின் முக்கூறுகளை விளக்குக.

(அல்லது)

வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப் பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக.

**தொகுப்பு மதிப்பீட்டுத் தேர்வு - III**

**தமிழ் (முதல் மொழி) தாள் 1**

**பத்தாம் வகுப்பு**

**பகுதி - ஆ**

**மதிப்பெண் : 10** **மாணவர் பெயர் ____________________ நேரம் : 30 நிமிடம்**

| கல்வித்தரம் | புரிந்துகொள்ளுதல் விடையளித்தல் | சுயமாக எழுதுதல் | மொழித்திறன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வினா எண் | 1-6 | 7-12 | 1-20 | |
| ஒதுக்கப்பட்ட மதிப்பெண் | 12 | 18 | 10 | 40 |
| மாணவர் பெற்ற மதிப்பெண் | | | | |
| தரம் | | | | |

**குறிப்பு :**

1. கொடுக்கப்பட்ட வினாக்களுக்கான விடையை தேர்ந்தெடுத்து, அடைப்புக்குள் எழுதவும்.
2. பகுதி - ஆ-விற்கான விடைகளை, வினாத்தாளிலேயே எழுதி, பகுதி - அ விடைத்தாளுடன் இணைத்து தர வேண்டும்.

## பகுதி - ஆ

**I. மொழித்திறன்** (10 மதிப்பெண்)

கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய விடையத் தேர்ந்தெடுத்து, அதன் எதிரே உள்ள அடைப்புக்குறியில் விடைக்கான எழுத்தை எழுதவும்.

20x1/2=10

1. கர 'கமலம்' மிசைகுவிய-அடிக் கோடிட்ட சொல்லின் பொருள் ( )
   அ. மல்லிகை ஆ. தாமரை இ. கை ஈ. கன்ண்டலம்
2. மன வலிமையுடையோா் என்னும் பொருள் தரும் சொல் ( )
   அ.வண்மை ஆ. உறவோர் இ. உரவோர் ஈ. ஒள்ளியவர்
3. 'சிங்கம்' எனப் பொருள் தரும் சொற்கள் ( )
   அ.கேசரி, மடங்கல் ஆ. மாதிரம், கேசரி
   இ. சந்திரன், மாதம் ஈ. பூமி, சந்திரன்
4. 'திங்கள்' என்பதன் இரு பொருள் ( )
   அ. கிழமை, நட்சத்திரம் ஆ. கிழமை, சூரியன்
   இ. சந்திரன், மாதம் ஈ. பூமி, சந்திரன்
5. 'அங்கண்' பிரித்து காண்க. ( )
   அ. அங்+கண் ஆ.அம்+கண் இ.அ+கண் ஈ.அங்+கண்
6. இளமை + கனி சேத்துக் காண்க. ( )
   அ. இளமை கனி ஆ. இளம் கனி இ. இளங்கனி ஈ.இன்பக்கனி
7. கருமை+குழி என்பது --- எனும் விதிகளின் படி புணரும் ( )
   அ. ஆதிநீடல், இனமிகல் ஆ. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்
   இ. ஈறுபோதல், இனமிகல் ஈ. ஆதிநீடல், ஈறுபோதல்

8. ‘செந்தமிழ்’ என்பது எவ்வகைப் புணர்ச்சி ( )

அ. பண்புப்பெயர்ச்சி புணர்ச்சி ஆ. மகர ஈற்றுப் புணர்ச்சி

இ. திசைப்பெயர் புணர்ச்சி ஈ. குற்றியலுகரப் புணர்ச்சி

9. கருப்பொருள் ----- வகைப்படும் ( )

அ. 12 ஆ.10 இ. 14 ஈ.13

10. ‘இலாபம்’ எனும் சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல் ( )

அ. பயன் ஆ.வருவாய் இ.இசைவு ஈ.கையூட்டு

11. நிரை கவர்தல் என்பது ( )

அ. கரந்தை ஆ. உழிஞை இ. வெட்சி ஈ. வாகை

12. மூவிடம்-இத்தொகைச் சொல்லை விரித்துக் காண்க. ( )

அ. அறம், பொருள், இன்பம் ஆ. இயல், இசை, நாடகம்

இ. நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் ஈ. தன்மை, முன்னிலை, பல்ர்க்கை

13. கெடுகவென் ஆயுளென-அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு ( )

அ. வினைத்தொகை ஆ. வினையெச்சம்

இ. வியங்கோள் வினைமுற்று ஈ. வினையாளணையும் பெயர்

14. வள்ளுகிர் திண்டிறல் புலியே-அடிக்கோடிட்ட சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு ( )

அ. வினைத்தொகை ஆ. வேற்றுமைத் தொகை

இ. பண்புத் தொகை ஈ. உவமைத் தொகை

15. ‘கேட்டான்’ இப்பகுபதத்தின் பகுதி ( )

அ. கேட் ஆ. கேட்டு இ. கேட்ட ஈ.கேள்

16. ‘இன்’ என்ற இறந்தகால இடைநிலை இடம்பெறும் சொல் ( )

அ. விளம்பினன் ஆ.வந்தான் இ.கேட்டான் ஈ.சென்றான்

17. தாய்மொழி-இச்சொல்லை அலகிட்டால் எனப் பிரியும் ( )

அ. நேர், நேர் ஆ.நிரை, நேர் இ. நேர், நிரை ஈ.நிரை,நிரை

18. கலிப்பாவின் ஓசை ( )

அ. தூங்கல் ஓசை ஆ. துள்ளல் ஓசை

இ.அகவலோசை ஈ.செப்பலோசை

19. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது----------அணி ( )

அ. தற்குறிப்பேற்ற அணி ஆ. பிறிது மொழிதஅணி

இ. சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ. வஞ்சகப் புகழ்ச்சி அணி

20. துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் ( )
துப்பாய தூஉம் மழை - இக்குறளில் இடம் பெறும் அணி

அ.பொருள் பின்வரு நிலையணி ஆ. சொல் பின்வரு நிலையணி

இ. சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ. சிலேடையணி

**தொகுப்பு மதிப்பீட்டு தேர்வு - 3**

**முதல் மொழி தமிழ் முதல் தாள்**

**பத்தாம் வகுப்பு**

**விடைத்தாள்(**Answer Key)

**பகுதி அ**

---

I) அ)

1. அ. பகல்வெல்லும் : பகற்பொழுதில்

| | | |
|---|---|---|
| கூகையைக் | : | கோட்டானை |
| காக்கை | : | காக்கை |
| இகல் வெல்லும் | : | பகை வெல்லும் |
| வேந்தர் | : | அரசர் |
| வேண்டும் பொழுது | : | காலம்அறிந்துசெயல்படவேண்டும் |

ஆ. இடிப்பாரை : கடிந்து அறிவுரைகூறும் பெரியார்

| | | |
|---|---|---|
| இல்லாத | : | இல்லத |
| மெரா | : | பாதுகாவல் |
| மன்னன் | : | அரசன் |
| கெடுப்பார் | : | தன்னைக் கெடுக்கும் பகைவர் |
| இலானுங் | : | இல்லை எனினும் |
| கெடும் | : | கெட்டழிவான் |

ஆ)

2. அ. உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலவலென எவ்விடத்தும் பாய்ச்சிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.

**கருத்துரை** : பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்துகொள்ளும் வகையில் தமிழில் வெளியிட வேண்டும். தமிழறிவை மதங்களுக்குள் அடங்காமை வேண்டும்.

ஆ. இன்றினைப் பாறுவம் என்றிருந்தால் - வழி
என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றினைப் பாறுக முற்றிடத்தே - தம்பி
தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே!

**கருத்துரை:** இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் எனறு எண்ணினால் ஓர் இரவுக்குள் வழித்தடத்தில் என்னென்ன நேருமோ; பணியை முடித்து ஓய்வு பெறுக தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும்.

இ. 3. உழுபவர் (அ) உழவுத் தொழில் செய்பவர்.
4. உணவு
5. மருதம்
6. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

2) ஈ. 7. தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர். அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரிய புராணம் எனும் பெயர் பெற்றது. இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது. தில்லை நடராசப் பெருமாள் உலகெல்லாம் என்று அடியெடித்துக் கொடுக்கப் பாடப்பட்டதெனவும் கூறுவர். இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வமணம் கமழும் தன்மையுடையன. எனவேதான் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார். உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்பார் திரு.வி.க.

8. ஊர்தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும், மூங்கில்கள் தந்த பெரிய முத்துக்களையும் கொடுத்து அவ்வூரில் உள்ள நெற்கதிரைத் தொகுத்துக் கொண்டு வருகின்ற நீர், கரையோடு மோதி வழியும் காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையனே! செல்வத்தைத் தருகின்ற குடையும், பூமிதேவியின் உரிமையும் ஆகிய இவற்றையுடைய நந்தி மன்னனே! அறிவில்லாதவரான அரசர் உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

9. என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசப்பக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பது தான் என்று அவரே கூறுகிறார். அவர் இராமனைப் போற்றியதும், அவன் மனிதனாக பிறந்து, மனிதப் பண்புகளால் உயர்ந்து, மானுடரோடு மற்ற உயிரினங்களையும் உடன் பிறந்தவர்களாக ஏற்று, உலகம் உய்ய வழி காட்டியதால் தான், மனிதர் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதைக் காட்டிலும், மனிதத் தன்மையால் பிறருக்கு உணர்த்தப் பெறுவது சிறப்பு சான்றாக நான் மொழியால் குஜராத்தியன்; நாட்டால் இந்தியன்; உலக நிலையில் உலகன்; ஆனால் மனிதனாக இருத்தல் வேண்டும்

குஜராத்தியனாக இருப்பதனைக் காட்டிலும், இந்தியனாக இருப்பதைக் காட்டிலும், மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது என்று எண்ண வேண்டும் என்று விழைந்தார் காந்தியடிகள்.

10. கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் கல்விப் படங்கள், பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டினால், அதனைக் காணும் மாணவர் கல்வியறிவை எளிதில் பெறுவர். வாழ்க்கையில் நேரில் காண முடியாது பல இடங்களையும் நேரில் பார்ப்பதனைப் போலவே காட்டுவதற்குக் கல்விப்பாடம் வழி செய்கிறது.

உ) 11. அலைகளையுடைய கங்கைக் கரையின் பக்கத்திலுள்ள 'சிருங்கி பேரம்' என்னும் நகரில் வாழும் தலைவன் குகன். இவன் இராமனைக் காண தேனும் மீனும் கொண்டு சென்றான். இராமனைக் காண வந்த செய்தியை, இலக்குவன் இராமனைத் தொழுது, வெற்றி பொருந்திய தலைவனே! தூய உள்ளம் உடையவன்; தாயினும் சிறந்த அன்பினன்; குகன் என்னும் பெயரினன்; தன் உறவினருடன் நின்னைக் காண வந்துள்ளான் என்றான்.

இராமன் விருப்பத்துடன் குகனைக் காண அழைத்து வருமாறு கூறினார். குகன் விரைந்து வந்து இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான். தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான். அளவில்லாத பேரன்பினனாகிய குகன், தேவரீர் நல்லுணவாக அமையும்படி தேனையும், மீனையும் பக்குவப்படுத்தி கொண்டு வந்துள்ளேன் இதனை ஏற்றுக்கொள்வது குறித்துக் தங்கள் கருத்து யாதோ என்றார். உள்ளத்து அன்பு முதிர்வினால் குகன் கொண்டு வந்த பொருள்கள் கிடைத்தற்கரியன. அமுதத்தைவிடச் சிறந்தன.

எம்போன்றோர்க்கும் உரியன; ஆகையால் இனிமையான இவை, நாங்கள் விரும்பி உண்டதற்கும் சமம், கருமுகில் வண்ணனாகிய இராமன் கூறியதைக் கேட்ட குகன். இவ்வுலகு அனைத்திற்கும் செல்வம் போன்றவனே! தங்களை இத்தவக் கோலத்தில் பார்த்த என்னிரு கண்களை எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான்; இம்மனதோடு என்னிருப்பிடம் செல்லத் துணியேன். ஐயனே தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன் என்றான். இராமன் குகனை நோக்கி எல்லாவற்றிலும் இனிய நண்பனே! இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக! என்றான்.

இராமனின் மனக்குறிப்பை அறிந்த குகன் மிகவிரைவாகச் சென்றான்; பெரியதோர் படகைக் கொண்டுவந்தான். விரைந்து படகினைச்

செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டான். உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவது போலக் குகனும் படகினை விரைவாக செலுத்தினான். கங்கையின் மறுகரை அடைந்ததும் இராமனை விட்டு பிரிய மனமில்லாதவனாக குகன் இருந்தான். “என் உயிர் போன்றவன் நீ; இலக்குவன் உன் தம்பி; சீதை உன் கொழுந்தி; நான் உன் ஆளுகைக்குரியவன். துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை. இப்பிரிவு இடைக் காலத்தே; அதனை நினைத்து வருந்த வேண்டா. முன்னர் நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம்; விரிந்த அன்பினால் இனி உன்னோடு ஐவரானோம்” என்று இராமன் குகனை ஆறுதல்படுத்தினர்.

(அல்லது)

பரவிய தெளிந்த அலைகள் பெருக்கெடுத்து ஓடும் ஆறு. அவ்வாற்றினது பரப்பையும், கொடுமை வாய்ந்த யானைக் கூட்டங்கள் செல்கின்ற காடுகளையும் கடந்து வந்த மனிதன் ஒருவன் முகம்மது நபியின் திருவடிகளை வணங்கிச் சிலவற்றைச் சொல்லத் தொடங்கினான். நாங்கள் நடக்கின்ற இப்பாதையினிடத்து, ஒருகாத வழித் தொலைவில் நெடிய அகழி போன்ற ஓடை ஒன்று உண்டு. அதனருகே அடர்ந்த மரங்கள் உடைய காட்டில் கொடிய வரிகளையுடைய பாய்கின்ற புலியொன்று உண்டு. அது தனது நீண்ட வாலினால் தரையில் அடித்து, உடல் நிமிர்ந்து, நான்கு கால்களையும் மடித்துத் தரையில் அடித்து, உடல் நிமிர்ந்து, நான்கு கால்களையும் மடித்துத் தரையின் மேல் படுத்து, இரண்டு கண்களும் நெருப்புப் பொறிகளைக் கக்க வெண்பற்கள் ஒளிவிட, வாயில் புலால் நாற்றம் வீச, முன் நெருங்கிய காட்டில் சினத்தோடு இருக்கும்.

அப்புலியானது, சிங்கத்தைத் தவிர பிற விலங்குகளின் இறைச்சியை உண்ணும் மதங்கொண்ட யானைகளின் மார்பினை கீறிக் குருதியினைக் குடித்து உறங்காது நின்று, பெரிய மலைகளும் அதிருமாறு முழங்கும், அவ்வோசையினைக் கேட்ட, காட்டெருமைகளும் பன்றிகளும் கரடிகளும் கலைமான்களும் தங்கள் கால்கள் தடுமாற்றமுற்று விழுந்து உடல் நடுக்கமடையும்.

உயிரினம் புலிக்கு அஞ்சி வாழும் செய்திகள் அனைத்தையும் முகம்மது நபிகள் கேட்டறிந்தவுடன், அம்மனிதனைப் புன்துரிப்புடன் பார்த்து தொல்லை தரும் அப்புலியானது இருக்குமிடம் எவ்விடம் என்று கேட்டார். அருகில் தான் இருக்கிறது என்று சொன்னாள். சிங்கத்திற்கு ஒப்பாகிய முகம்மது நபி ஒளிவிடும் வேற்படையினை கையில் ஏந்தியவர் நடந்து

வருவதை அவ்வரிப்புலி பார்த்தது. முகம்மது வருவதனைப் பார்த்தபொழுது, அப்புலி தனது வாலை வளைத்து உடல் நடுக்கமுத்து மெல்ல மெல்ல நடந்து வந்து, தன் தலையைத்தாழ்த்திப் பணிந்து வணங்குகிறது. அப்புலியை, முகம்மது நபி மிகுந்த மனம் மகிழ்ந்து அழகிய மணிக்கரத்தினால் தலையையும் முகத்தையும் தடவியருளினார்.

முகம்மது நபி, புலியை நோக்கி, நீ இன்று முதல் உயிர்வதை செய்வதனை விடுத்து, இவ்விடத்திலிருந்து அகன்று வேறொரு காட்டிற்குப் புகுவாயாக என்று அருளினார். அப்புலியானது முகம்மதுநபியின் அடிகளை வணங்கி நல்லது நல்லது என்று சொல்லிப் புகழ்ந்தவாறே அவ்விடத்தைவிட்டு நடந்து சென்றது. அங்கு வந்த பெரியோர்கள் இவ்வற்புதத்தைக் கண்டு, இவர் இறைத்தூதர் என்ற உண்மையை உணர்ந்து உறுதி கொண்ட உள்ளம் உடையவர்களாயினர்.

12. பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தி, தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப்படுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

**எடுத்தல்:** பேச்சைத் தொடங்குவது எடுப்பு, பேச்சின் தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. தட்டுத்தடங்களின்றிப் பேசுவதற்குத் தொடக்கமே அடித்தளமாகும். கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும். அவையோர் தம் உள்ளங்களைக் கேட்பதற்கும் பக்குவத்தில் வைத்திருக்க வேண்டும். மண்ணில் ஈரப்பதம் இருந்தால் தான் விதைக்க முடியும் என்பதனைப்போலக் கேட்போரைத் தன் வயப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது.

**தொடுத்தல்:** சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்; நிரல்படச் சொல்லுதல் வேண்டும், திறம்படச் சொல்லுதல் வேண்டும்; தெளிவாகவும் சொல்லுதல் வேண்டும்; உணர்ச்சி ஒளி மின்னுதல் வேண்டும்; ஊக்கம் துடித்தல் வேண்டும்; இவையனைத்தும் பேச்சின் இன்றியமையாப் பொருண்மைகளாம்.

உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். அப்பேச்சே கேட்போர் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று கேட்பவர்களுடைய உள்ளத்தை பிணிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக அமையும். பேச்சாளர் தாம்

உணர்ச்சிவயப்படாது, கேட்போரின் உள்ளத்தில் தாம் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பேசுதல் வேண்டும்.

**முடித்தல்:** பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக் கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும் எனலாம். பேச்சாளர் கருத்துக்கு அவையோர் இணங்குவதும் மாறுபடுவதும், அவர்தம் பேச்சின் முடிவுரையைப் பொருத்தே அமையும்.

(அல்லது)

வள்ளலாரின் அற்புதமான பாடல்கள் கற்போரை மனமுருகச் செய்யும் இவர் பொதுமை உணர்வுடன் பிற தெய்வங்களின் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் எளிய இனிய பாடல்கள்; கல்லார்க்கும் கற்றவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் கருத்து நிறை பாடல்கள்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். எனும் பாடல்வழி அவருடைய ஒருமையுணர்வை அறிய முடிகிறது. மூட நம்பிக்கைகளாலும் சாதி, மத வேறுபாடுகளாலும் மக்கள் துன்புறுவதனைக் கண்டு மனம் பதைத்த வள்ளலார். கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக எனவும் சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன் என்றும் பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும் அண்ணுற வடுத்த அரும் பெருஞ்ஜோதி என ஆணும் பெண்ணும் சமமென்று தன் பாடல்கள் வழி வலியுறுத்தினார்.

உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் எனும் உண்மையை தன் பாடல்கள் வழி இச்சமுதாயத்திற்கு எடுத்துரைத்தார்.

**தமிழ்ப்பற்று:**

வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர்; தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார். பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாய் திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம்பற்றச் செய்து அத்தென்மொழியால்

பல்வகைத் தோத்திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர் என்று உண்மை உரைத்தார்.

**தொகுப்பு மதிப்பீட்டு தேர்வு**
**முதல் மொழி தமிழ் முதல் தாள்**
**பத்தாம் வகுப்பு**
**விடைத்தாள்(Answer Key)**
**பகுதி ஆ**

---

1. ஆ
2. இ
3. அ
4. இ
5. ஆ
6. இ
7. இ
8. அ
9. ஈ
10. ஆ
11. இ
12. ஈ
13. இ
14. இ
15. ஈ
16. அ
17. இ
18. ஆ
19. ஆ
20. ஆ

**தொகுப்பு மதிப்பீட்டு தேர்வு - 3**

**முதல் மொழி - தமிழ் மாதிரி வினாத்தாள்**

**தமிழ் இரண்டாம் தாள்**

**பகுதி அ& ஆ**

**மதிப்பெண் : 40** **நேரம் : 2.45 நிமிடம்**

---

**குறிப்பு : மாணவர் வினாத்தாளை படிப்பதற்கு 15 நிமிடம் ஒதுக்கப்பட வேண்டும்.**

**பகுதி - அ**

I. **புரிந்து கொள்ளுதல் - விடையளித்தல்** **12 மதிப்பெண்**

அ. கீழ்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக.

(அ) இராமச்சந்திரன் நடிப்புக்கலையையும், அரசியலையும் தமது இரு கண்களாக கருதினார்.

(ஆ)பாரதரத்னா எம்.ஜி.ஆர் இலங்கையிலுள்ள கண்டியில் 1917-ம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் பிறந்தார்.

(இ) புரட்சித் தலைவர் என்று மக்களால் போற்றப்பட்ட எம்.ஜி.இராமச்சந்திரன் 24.12.1987அன்று இயற்கை எய்தினார்.

(ஈ) திரைப்படத்துறையில் ஈடுபட்டுச் சிறுசிறு பாத்திரங்களில் நடித்துக் கதாநாயகனாக உயர்ந்தார்.

ஆ. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. 4x1=4

கண்ணடக்கம் இமைக்காத்தல்
நாவடக்கம் வாய்ச்சிறையில்
மூச்சடக்கம் காற்றினிலே
மெய்யடக்கம் கல்லறையில் - நல்ல
மனவடக்கம் அறிவொளியில்
காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும் - இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்.

2. வாய்சிறையில் உள்ளது என்ன?
3. மெய்யடக்கம் எங்குள்ளது?
4. ஆற்றின் பெருக்கம் என்னவாகும்?
5. இனின சாற்றின் பெருக்கத்தின் பயன் என்ன?

இ. கீழ்க்காணும் பத்தியை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக 4 x ½ =2

கலைஞர் மு. காருணாநிதி அவர்கள் உரையாடலில் தீப்பொறி பறக்கும், சிந்தனை சுடர்விட்டுத் தெறிக்கும், வளமான தமிழ் வந்து விளையாடும். இவர் எழுதுகோல் உரைநடை தீட்டுவதில் தன்னிகரற்று விளங்குகிறது.

இவருடைய உரைநடை ஆற்றலால் வண்ணமும், எழிலும் பெற்று வெற்றி நடைபோட்ட நாடகங்கள் பலவாகும். பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி, பூம்பூகார், அணையாவிளக்கு முதலிய திரைப்படங்களில், இவர் வசனநடை கைவந்த கலைஞராய்த் திகழ்வதைக் காணலாம். இவரது ‘ரோமாபுரி பாண்டியன்’ பெரும்புழக்பெற்ற வரலாற்று புதினம் ஆகும்.

6. எவருடைய உரையாடலில் தீப்பொறி பறக்கும்?
7. பராசக்தி திரைப்படத்திற்கு வசனம் எழுதியவர் யார்?
8. எது உரைநடை தீட்டுவதில் தன்னிகரற்று விளங்குகிறது?
9. கலைஞரின் வரலாற்று புதினத்தின் பெயர் என்ன?

ஈ. கீழ்க்காணும் கடிதத்தை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக $4 \times ½ = 2$

விடுநர்
ஊர் பொதுமக்கள்,
திருவள்ளுவர் நகர்,
திருச்சி.

பெறுநர்
இயக்குநர் அவர்கள்,
பொது நூலகத் துறை,
சென்னை-600 002.

பொருள் : நூலகம் அமைத்து தர வேண்டுதல் தொடர்பாக.

அய்யா வணக்கம்,
எங்கள் ஊர் திருவள்ளுவர் நகர், இவ்வூரில் மூவாயிரம் பேர் வாழ்கிறோம். அறுநூற்றுக்கும் மேற்பட்ட படித்த இளைஞர்கள் உள்ளோம். அன்றாட செய்திகளை அறிந்து கொள்ளவும். பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், பயனுள்ள வகையில் பொழுதை கழிக்கவும், நூலகம் ஒன்றை எங்கள் ஊரில் அமைத்து தர ஆவண செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

திருவள்ளுவர் நகர்
--.--.2016

இப்படிக்கு
தங்கள்
உண்மையுள்ள

திருவள்ளுவர் நகர்,
ஊர்ப் பொதுமக்கள்.

உறைமேல் முகவரி
பெறுநர்
இயக்குநர்,
பொது நலத்துறை,
சென்னை - 600 002.

10. யாரால் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது?
11. கடிதத்தின் நோக்கம் என்ன?
12. யாருக்கு இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது?
13. திருவள்ளுவர் நகரில் உள்ள மக்கள் தொகை எவ்வளவு?

II. சுயமாக எழுதுதல் - படைப்பாற்றல் 18 மதிப்பெண்

உ. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு வாக்கியங்களில் விடையளி

14. நூலகத்தின் பல்வேறு பெயர்கள் என்ன? 2x2=4
15. தொல்லியல் துறை பற்றி எழுதுக?

ஊ. கீழ்க்காணும் வினாவிற்கு 12 வாக்கியங்களில் விடையளி.

16. ‘மெல்ல மெல்ல மற’ என்னும் சிறுகதையில் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

(அல்லது)

‘குறட்டை ஒலி’ கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.

எ. கீழ்க்காணும் வினாவிற்கு விடை எழுதுக 2x5=10

17. நீ கண்டு களித்த சுற்றுலா குறித்து உன் நண்பனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக.

(அல்லது)

பெண் கல்வி குறித்து கட்டுரை எழுதுக.

18. ‘தூய்மை இந்தியா’ எனும் தலைப்பில் கையெழுத்து இதழ் தயார் செய்க.

(அல்லது)

உனக்கு பிடித்த நிகழ்வோ அல்லது உரையாடலோ குறித்து எழுதுக.

**தொகுப்பு மதிப்பீட்டுத் தேர்வு - 3**

**தமிழ் முதல் மொழி - தமிழ் தாள் - II**

**பத்தாம் வகுப்பு**

**பகுதி - ஆ**

**மதிப்பெண் : 10** **நேரம் : 30 நிமிடம்**

| கல்வி தரம் | புரிந்துகொள்ளுதல் விடையளித்தல் | சுயமாக எழுதுதல் படைப்பாற்றல் | மொழித்திறன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | 1 - 13 | 14 - 18 | 1 - 20 | |
| ஒதுக்கப்பட்ட மதிப்பெண் | 12 | 18 | 10 | 40 |
| மாணவர் பெற்ற மதிப்பெண் | | | | |
| தரம் | | | | |

குறிப்பு : 1. கொடுக்கப்பட்ட வினாக்கான விடையை அடைப்பில் குறிக்கவும்.

2. பகுதி - ஆ-விற்கான விடையை பகுதி - ஆ வினாத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.

3. பகுதி - ஆ வினாத்தாளை பகுதி - அ எழுதிய விடைத்தாளுடன் இணைத்து தருதல் வேண்டும்.

பகுதி - ஆ 20x1/2=10

கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எதிரே உள்ள அடைப்புக்குறியில் விடைக்கான எழுத்தை எழுதுக.

1. எழில் என்ன சாப்பிட்டாய்? எவ்வகைத் தொடர் ( )

(அ) உணர்ச்சித் தொடர் (ஆ) வினாத்தொடர்

(இ) உடன்பாட்டுத்தொடர் (ஈ) எதிர்மறைத் தொடர்

2. நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை எவ்வகைத் தொடர் ( )

(அ) வினாத்தொடர் (ஆ) தனிநிலைத்தொடர்

(இ) கலவைத்தொடர் (ஈ) கட்டளைத் தொடர்

3. பூங்கொடி திருவாசகம் கற்றாள்-எவ்வகைத் தொடர் ( )

(அ) உணர்ச்சித் தொடர் (ஆ) வினாத்தொடர்

(இ) பிறவினைத் தொடர் (ஈ) தன்வினைத் தொடர்

4. தலைமையாசிரியர் தேசியக்கொடியை ஏற்றினார்.

(இதனை செய்யப்பாட்டு வினையாக்குக.) ( )

(அ) தேசியக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது

(ஆ) தேசியக்கொடியை தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது

(இ) தேசியக்கொடி ஏற்றப்பட்டது தலைமையாசிரியர்

(ஈ) தலைமையாசிரியர் ஏற்றினால் தேசியக்கொடியை.

5. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்-இதனை எதிர்மறைத் தொடராக்குக. ( )

(அ) கலைச்செல்வி கட்டுரை எழுதுவாள்

(ஆ) கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை

(இ) கட்டுரை எழுதியது யார்?

(ஈ) கட்டுரை கலைச்செல்வியால் எழுதப்பட்டது.

6. தேன்மொழி பொன்னியிடம் "நான் நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள். (அயற்கூற்றாக்குக.) ( )

(அ) தேன்மொழி பொன்னியிடம் நான் நாளை மதுரைக்குச் செல்வேன் என்றாள்

(ஆ) தேன்மொழி பொன்னியிடம் தான் நாளை மதுரைக்குச் செல்வேன் என்றாள்

(இ) தேன்மொழி பொன்னியிடம் நான் மறுநாள் மதுரைக்குச் செல்வேன் என்றாள்

(ஈ) தேன்மொழி பொன்னியிடம் தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.

7. மா, பலா, வாழை என்பன முக்கனிகள் - இது எவ்வகைத் தொடர் ( )

(அ) தொடர் நிலைத்தொடர் (ஆ) தனிநிலைத் தொடர்

(இ) கலவைத் தொடர் (ஈ) உணர்ச்சித் தொடர்

8. நேற்றிரவு நல்ல மழை பெய்தது; அதனால் ஏரி, குளங்கள் நிறைந்தன- எவ்வகைத் தொடர் ( )

(அ) வினாத்தொடர் (ஆ) உணர்ச்சித் தொடர்

(இ) தொடர்நிலைத் தொடர் (ஈ) கட்டளைத் தொடர்

9. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவரிடம் வினவுவது. எவ்வகை வினா ( )

(அ) அறியாவினா (ஆ) அறிவினா

(இ) கொளல் வினா (ஈ) கொடை வினா

10. பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா எவ்வகை வினா ( )

(அ) கொளல் வினா (ஆ) அறிவினா

(இ) கொடை வினா (ஈ) ஏவல் வினா

11. இது செய்வாயா? என்று வினவியபோது நீயே செய் என்று கூறுவது எவ்வகை விடை ( )

(அ) சுட்டு விடை (ஆ) நேர் விடை (இ) ஏவல் விடை (ஈ) மறைவிடை

12. ஆடுவாயா? என்று வினவியபோது பாடுவேன் என்று கூறுவது எவ்வகை விடை ( )

(அ) மறைவிடை (ஆ) ஏவல் விடை

(இ) சுட்டு விடை (ஈ) இனமொழிவிடை

13. அவசரக் குடுக்கை - மரபுக் தொடருக்கு பொருள் கூறு ( )

(அ) எண்ணித் துணியாதார் (ஆ) பொய்யழுமை

(இ) மிகுதியாக பேசுதல் (ஈ) இல்லாத ஒன்று

14. கானல் நீர் - மரபுத் தொடருக்கான பொருள் கூறு ( )

(அ) இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது (ஆ) மிகுதியாக பேசுதல்

(இ) பயனின்றி இருத்தல் (ஈ) அலைந்து திரிதல்

15. ஆகாயத் தாமரை - மரபுத் தொடருக்கான பொருள் கூறு ( )

(அ) அலைந்து திரிதல் (ஆ) இல்லாத ஒன்று

(இ) பயனின்றி இருத்தல் (ஈ) மிகுதியாக பேசுதல்

16. பஞ்சாய் பறத்தல்-மரபுத் தொடருக்கான பொருள் ( )

(அ) மிகுதியாக பேசுதல் (ஆ) இல்லாத ஒன்று

(இ) அலைந்து திரிதல் (ஈ) பொய்யழுகை

வாக்கியத்தில் அமைத்து எழுதுக

17. அடியற்ற மரம் போல

..........................................................................................................................................

..........................................................................................................................................

18. கீரியும் பாம்பும்போல

..........................................................................................................................................

..........................................................................................................................................

19. அனலிடைப்பட்ட புழுவைப்போல

..........................................................................................................................................

..........................................................................................................................................

20. மலரும் மணமும் போல

..........................................................................................................................................

..........................................................................................................................................

**தொகுப்பு மதிப்பீட்டு தேர்வு - 3**
**முதல் மொழி தமிழ் இரண்டாம் தாள்**
**பத்தாம் வகுப்பு**
**விடைத்தாள்** (Answer Key)
**பகுதி அ**

---

I. **புரிந்துக் கொள்ளுதல் விடையளித்தல்** 12 மதிப்பெண்

**அ. கீழ்க்காணும் துணைப்பாடக் கதையை வரிசைப்படுத்தி எழுதுக.** 4 x1=4

1. (அ) பாரதரத்னா எம்.ஜி.ஆர் இலங்கையில் உள்ள கண்டியில் 1917ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் பிறந்தார்.
   (ஆ) திரைப்படத்துறையில் ஈடுபட்டுச் சிறுசிறு பாத்திரங்களில் நடித்து கதாநாயகனாக உயர்ந்தார்.
   (இ) இராமசந்திரன் நடிப்புக்கலையையும் அரசியலையும் தமது இரு கண்களாக கருதினார்.
   (ஈ) புரட்சித் தலைவர் என்று மக்களால் போற்றப்பட்ட எம்.ஜி.இராமசந்திரன் 24-12-1987அன்று இயற்கை ஏய்தினார்.

**ஆ. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

4 x1=4

2. வாய்ச்சிறையில் உள்ளது நாவடக்கம் ஆகும்.
3. மெய்யடக்கம் கல்லறையில் உள்ளது.
4. ஆற்றின் பெருக்கம் புனலாகும்.
5. இனிய காற்றின் பெருக்கத்தால் இனிய சுவை கிடைக்கும்.

**இ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

4 x1/2=2

6. கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உரையாடலில் தீப்பொறி பறக்கும்.
7. பராசக்தி திரைப்படத்திற்கு வசனம் எழுதியவர் கலைஞர் மு.கருணாநிதி ஆவார்.
8. கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் எழுதுகோல் உரைநடை தீட்டுவதில் தன்னிகரற்று விளங்குகிறது.
9. கலைஞரின் வரலாற்று புதினத்தின் பெயர் ரோமாபுரி பாண்டியன் ஆகும்.

**ஈ. கீழ்க்காணும் கடிதத்தை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

4 x1/2 =4

10. திருவள்ளுவர் நகர் பொதுமக்கள் சார்பாக இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.
11. கடிதத்தின் நோக்கம் நூலக வசதியை பெறுவதாகும்.
12. பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்கு இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.
13. திருவள்ளூர் நகரில் உள்ள மக்கள்தொகை மூவாயிரம் ஆகும்.

II **சுயமாக எழுதுதல் படைப்பாற்றல்** 18 மதிப்பெண்

**உ. கீழ்க்காணும் வினாவிற்கு நான்கு வாக்கியங்களில் விடையளி.** 2 x2=4

14. புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசகசாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
15. தொல்பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் என்கிறோம். தொன்மை காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, தொழில், வணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவை பற்றி அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களான கல்வெட்டுக்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்வதே தொல்லியல் ஆகும்.

**கீழ்காணும் வினாவிற்கு 12 வாக்கியங்களில் விடை எழுதுக.** 1 x4=4

16. * ஒருநாள் ஆம்பூரிலிருந்து அவசரமாக திரும்பி வந்தான் கமலநாதன். “கோகிலா புறப்படு நர்மதா நர்சிங் ஹோமிர்க்கு செல்ல வேண்டும்” என்று தன் மனைவியிடம் கூறினான்.
    - நர்மதா நர்சிங் ஹோமில் கமலநாதன் நண்பன் இராமலிங்கத்தை சேர்த்திருந்தார்கள்.
    - இராமலிங்கத்தின் மனைவி சியாமளாவிடம் என்ன ஆச்சு என்று விவரத்தை கேட்க ஒருநாளைக்கு மூன்று டப்பா என்று ஓயாமல் சிகிரெட் பிடித்ததால் சுவாசப்பையில் புற்று நோய் வந்த விவரத்தை கூறினான்.
    - இன்னும் சிலமாதமே உயிரோடு இருப்பார் என்று மருத்துவர் கூறியதை கூறினாள் சியாமளா.ஆனால் அன்றுஇரவே இராமலிங்கத்தின் உயிர் பிரிந்தது.

- மனைவி கமலாவுடன் கமலநாதன் ஆறுதல் கூறுவதற்காக இராமலிங்கம் வீட்டிற்கு சென்ற வந்தான்.
- இராமலிங்கத்தின் இறப்பு கமலநாதன் மனதை பெரிதும் பாதித்தது. அதனால் சிகிரெட் பிடிக்கும் பழக்கத்தை மெல்ல மெல்ல மறக்க முயற்சி செய்வதாக கூறினான். கோகிலா மகிழ்ந்தாள்.

<u>(அல்லது)</u>

- ஒரு வீட்டில் மூன்று குடும்பம் மேல்வீட்டில் நாங்களும் கீழ்வீட்டில் வடப்பகுதியில் ஒரு செல்வம் செழுத்த திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத குடுத்தனகாரரும், தென்பகுதியில் ஆறுகுழந்தையுடன் கர்பவதியாக ஏழை தொழிலாளியின் மனைவி, அம்மா, நாய் என்று ஒரு குடும்பம்.
- ஏழைத்தாய் ஏழாவது வரவாக குழந்தையை ஈன்றெடுத்தாள் வீட்டு நாயும் 5 குட்டிகளை ஈன்றெடுத்தது.
- அடுத்த மூன்றாம் நாளில் வெளியே சென்ற நாய் வீடு திரும்பவில்லை அதனால் நாய்க்குட்டிகளின் க்ய்ங், க்ய்ங், என்ற சத்தம் அதிகமாக இருந்தது.
- தாய்நாயே தேடியும் பயனில்லை. நாயை கட்டாததால் முனிசிபாலிட்டியார் வெளியே திரிந்த தாய் நாயை பிடித்துச் சென்றுவிட்டனர்.
- செல்வகுடும்பத்தினார் மேல்மாடி வீடான எங்கள் வீட்டில் என்தாயிடம் இரவெல்லாம் தூக்கமில்லாமல் போய்விடும் எங்காவது வெளியே விட்டுவிட்டு வந்தால் நன்றாக இருக்கும். இந்த நாய்குட்டியின் சத்தம் என்று கூறினார். வெளியே விட்டால் இறந்துவிடும் என்று ஏழைத்தாய் கூறினாள்.
- வடப்பகுதியினர் குங்குமபூவும் சர்க்கரையும் கலந்து சுண்டகாய்ச்சி பருகிவிட்டு சன்னல் கதவை சாத்திவிட்டு உறங்கினார். அவர்கள் வீட்டில் குறட்டை ஒலி ஒலித்தது.
- ஏழைத்தாய் குட்டியின் அருகில் அமர்ந்து இடக்கையில் கொட்டாங்குச்சியில் தன் தாய்பாலை கறந்து குட்டிகளுக்கு பஞ்சு போன்ற துணியால் நனைத்து ஊட்டினாள்.
- நாய்க்குட்டியின் சத்தம் ஓய்ந்தது. விளக்கொளியில் அவளுடைய முகம் செந்தாமரைப்போல் மகிழ்ந்ததை கண்டேன்.

எ. **கீழ்க்காணும் வினாவிற்கு விடையளி.** 2 x5=10

**17.நண்பனுக்கு கடிதம்**

21, திருவள்ளுவர் தெரு,
திருச்சி.

அன்பு நண்பன் குமாருக்கு,

வணக்கம், நான் நலமாக உள்ளேன் உன் நலனும் உன் பெற்றோர் நலனும் அறிய ஆவலாய் உள்ளேன்.

நான் கடந்த மாதம் எங்கள் பள்ளியின் சார்பாக இன்பச்சுற்றுலா சென்றோம். எங்களுடன் எங்கள் தலைமையாசிரியர், தமிழாசிரியர், மற்றும் வரலாறு, ஆங்கில ஆசிரியைகளும், உடற்கல்வி ஆசிரியரும் உடன் வந்தனர். எங்கள் இன்பச் சுற்றுலா இன்பம் தரும், மாமல்லபுரம், வண்டலூர் விலங்குகள் காட்சி சாலையாகும். முதலில் மாமல்லபுரம் சென்றோம். அங்குள்ள சிற்பங்களை கண்டுவியந்தோம். கடலில் ஓடி ஆடி மகிழ்ந்தோம். கடற்கரை கோயிலுக்கு சென்று வந்தோம். அடுத்து வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு வந்து கண்ணிற்கு காட்சியாக விலங்குகளை கண்டு மகிழ்ந்தோம். நீயும் இதுபோன்ற சுற்றுலா வாய்ப்பு வரும்போது தவறாமல் கலந்துக்கொண்டு மகிழ்க என்று அன்புடன் கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்
பாலாஜி

**உறைமேல் முகவரி:**

**பெறுநர் :** அ.குமார்
த/பெ. ச.சண்முகசுந்தரம்
67, காமராஜர் தெரு,
மதுரை.

**குறிப்பு :**

1. அனுப்புநர் முகவரி
2. பெறுநர்/உறைமேல்முகவரி
3. பொருளடக்கம் இருத்தல் வேண்டும்.

**(அல்லது)**

**<u>பெண்கல்வி</u>**

**முன்னுரை**

**பொருளுரை (குறைந்தது மூன்று துணைத்தலைப்புகள் இடம் பெறுதல் வேண்டும்)**

**முடிவுரை**

**18.** **<u>தூய்மை இந்தியா</u>**

சித்தூர்,

06-06-2016.

**<u>தூய்மை இந்தியா தொடக்கவிழா மடல்</u>**

**நிகழ்ச்சி நிரல் 9.00 முதல் 5.30 வரை**

**காலை :** 9.00 முதல் 10.00 வரை

9.00 - 9.10 இறை வணக்கம்

9.10 - 9.30 தலைமை ஆசிரியர் வரவேற்புரை

9.30 - 9.50 விழாவை தொடக்கிவைத்து சிறப்பு விருந்தினர் உரை

9.50 - 10.00 தலைமையாசிரியர் ஏற்புரை

10.00 - 11.00 வரை குழந்தைகளின் கலைநிகழ்ச்சி

11.00 - 12.00 வரை சுற்றுப்புரத்தை தூய்மை செய்தல்

**நண்பகல் :** 12.00 - 1.00 மரம் நடுதல்

**பிற்பகல் :** 2.00 - 3.00 மாணவர் பேச்சுப்போட்டி

தலைப்பு: தூய்மையே சுகம் தரும்

3.00 - 4.00 ஓவியப்போட்டி

தலைப்பு : மாசு ஒழிப்பு

4.00 - 5.00 கவிதைப்போட்டி மற்றும் கட்டுரைபோட்டி

தலைப்பு : நீ கண்ட தூய்மை இந்தியா

5.00 - 5.30 விழா பேருரை வழங்கல்

பரிசு மாணவ, மாணவியர்க்கு சிறப்பு விருந்தினர் பரிசு வழங்கல்.

தேசிய கீதத்துடன் விழாவை நிறைவு செய்தல்.

(அல்லது)

**நிகழ்வு/உரையாடல்**

உன் சொந்த அனுபவத்தால் கிடைத்த நிகழ்வோ, அல்லது தேசத்தலைவர்/அறிவியல்மேதை/சான்றோரின் நிகழ்வை குறித்து அறிந்த விவரத்தை கூறுதல். அதில் நீ அறிந்த நீதியை/நற்கருத்தை விளக்குதல் ஆகும்.

**உதாரணம் :**

**பகைவரையும் மன்னிக்கும் பண்பு**

விருதுநகரில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதில் தந்தை பெரியார் பேசிக்கொண்டிருந்தார். அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் கத்தியுடன் பெரியார் மீது பாய்ந்தார். பெரியார் சிறிதும் பதற்றமில்லாமல் அவர் கையை எட்டிபிடித்தார். அவரை நோக்கி பாய்ந்த தொண்டர்களை அமைதியாக இருக்கும்படி கூறினார். கூட்டம் முடியும் வரை அவரை அருகிலேயே அமரவைத்து தொடர்ந்து உரையாற்றினார்.

கூட்டம் முடிந்த பிறகு அவரை ஒன்றும் செய்யாமல் பாதுகாப்பாக வீட்டில் கொண்டுபோய் விடும்படி கூறினார்.

**நீதி :** பகைவரையும் மன்னிக்கும் பண்பு (எவ்வாறு பெரியாரிடம் இருந்தது என்பதற்கான சான்றாகும்)

நாமும் அதேபோல் மன்னிக்கும் பண்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

**தொகுப்பு மதிப்பீட்டு தேர்வு - 3**
**முதல் மொழி தமிழ் இரண்டாம் தாள்**
**பத்தாம் வகுப்பு**
**விடைத்தாள்(**Answer Key)
**பகுதி ஆ**

---

1. (ஆ)
2. (இ)
3. (ஈ)
4. (அ)
5. (ஆ)
6. (ஈ)
7. (ஆ)
8. (இ)
9. (ஆ)
10. (அ)
11. (இ)
12. (ஈ)
13. (அ)
14. (அ)
15. (ஆ)
16. (இ)

17. அருள்மொழி இறைவனை வணங்குகையில் அடியற்ற மரம்போல விழுந்து வணங்கினான்.
18. இந்தியாவும், பாகிஸ்தானும் கீரியும், பாம்பும் போல உள்ளன.
19. வேலன் தன் உறவினர் இறந்த செய்தியைக்கேட்டு அனலிடைப்பட்ட புழுப்போல துடித்தான்.
20. திருவள்ளுவரும் வாசுகியும், மலரும் மணமும் போல இல்லறத்தில் இன்புற்றிருந்தனர்.